தினமலர்

# TNPSC Group 4 தேர்வு
# மாதிரி வினா-விடை

WWW.TAMILMIXEREDUCATION.COM

## பொதுத்தமிழ் (இலக்கியம்)

1. பத்துப்பாட்டில் குறைந்த அடிகளை உடைய நூல்
   (A) முல்லைப்பாட்டு
   (B) பெரும்பாணாற்றுப்படை
   (C) திருமுருகாற்றுப்படை
   (D) மலைப்படுகடாம்
2. தவறான கூற்றை எடுத்தெழுதுக
   (A) பெருமாள் திருமொழியை எழுதியவர் குலசேகராழ்வார்
   (B) இது 4000 திவ்வியப் பிரபந்தத்தில் 5ம் திருமொழியாக உள்ளது.
   (C) மொத்தம் 105 பாடல்கள் உள்ளன
   (D) குலசேகரரின் காலம் 11ம் நூற்றாண்டு
3. கூற்றுகளில் தவறானது எது (குமரகுருபரர்)
   (A) குமரகுருபரர் 17ம் நூற்றாண்டைச் சார்ந்தவர்
   (B) தமிழ், வடமொழி, இந்துஸ்தானி மொழிகளில் புலமை மிக்கவர்
   (C) முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ், மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், மதுரைக்கலம்பகம் போன்ற நூல்களை எழுதியுள்ளார்
   (D) சரசுவதி அந்தாதியும் நீதிநெறிவிளக்கமும் இவரது படைப்புகளாகும்
4. கூற்றுகளை ஆய்க (சிலப்பதிகாரம்)
   I. ஐம்பெரும் காப்பியங்களில் முதன்மையானது
   II. 3 காண்டங்களையும் 30 காதைகளையும் உடையது
   III. மணிமேகலையுடன் கதைத் தொடர்புடையது
   IV. மூவேந்தர் பற்றிய செய்திகளைக் கூறுவது
   (A) I, II, III சரி (B) அனைத்தும் சரி
   (C) I, II, IV சரி (D) I, III, IV சரி
5. தமிழ்நாடு என்ற சொல் இடம்பெறும் சங்க இலக்கிய நூல்
   (A) சிவகசிந்தாமணி (B) மணிமேகலை
   (C) சிலப்பதிகாரம் (D) தொல்காப்பியம்
6. "மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின் மன்னனின் கற்றோன் சிறப்புடையன்" என்ற பாடல் இடம்பெற்ற நூல்
   (A) நன்னெறி (B) குறுந்தொகை
   (C) மூதுரை (D) பழமொழி நானூறு
7. பொன்னொடு வந்து கறியொடு பெயரும் என்ற பாடலடி இடம்பெற்ற நூல்
   (A) புறநானூறு (B) பதிற்றுப்பத்து
   (C) அகநானூறு (D)சிறுபாணாற்றுப்படை
8. "நாராய் நாராய் செங்கால் நாராய்" பாடலை எழுதியவர்
   (A) குடபுலவியார்
   (B) வெண்ணிக்குயத்தியார்
   (C) சத்திமுத்தப்புலவர்
   (D) சலீம் அலி
9. "இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் எனும் அறவிலை வணிகன் ஆஅய் அல்லன்"; புறப்பாடலை பாடியவர்
   (A) மோசிகீரனார்
   (B) பெருவாயின் முள்ளியார்
   (C) ஏணிச்சேரி முடமோசியார்
   (D) பாண்டியன் அறிவுடை நம்பி
10. "திராவிட சாகரம்" என அழைக்கப்படும் நூல்
    (A) நாலாயிரத் திவ்விய பிரபந்தம் (B) தேவாரம்
    (C) திருக்குறள் (D) தேம்பாவணி
11. காவடிச் சிந்தின் தந்தை எனப்படுவர்
    (A) சென்னிகுளம் அண்ணாமலையார்
    (B) பாரதியார் (C) சி.வை.தாமோதரனார்
    (D) சித்திரகவி
12. தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை" பாடலடி இடம்பெற்ற நூல், யாருடைய கூற்று
    (A) கம்பராமாயணம், சீதை
    (B) சிலப்பதிகாரம், கண்ணகி
    (C) நளவெண்பா, தமயந்தி
    (D) சீவகசிந்தாமணி, காந்தருவத்தை
13. "எடுத்தல் படுத்தல் நலிதல் உழப்பில் திரியும் தத்தமில் சிறிது உளவாகும்" என்ற பாடலடி இடம்பெற்ற நூல்
    (A) ஆசாரக்கோவை (B) பழமொழிநானூறு
    (C) நன்னூல் (D) நாலடியார்
14. "கலஞ்செய் கம்மியர் வருகெனக் கூஇயல்" எந்த நூலில் இடம்பெறுவது
    (A) சிலப்பதிகாரம் (B) மணிமேகலை
    (C) சீவகசிந்தாமணி (D) அகநானூறு
15. பொதியிலாயினும் இமய மாயினும் பதியெழு அறியாப் பழங்குடி எனக் கூறியவர்
    (A) திரிகூடராசப்பக் கவிராயர்
    (B) இளங்கோவடிகள்
    (C) கபிலர் (D) பரணர்
16. மரபுநிலை திரிதல் செய்யுட்கு இல்லை மரபுவழிப் பட்ட சொல்லின் ஆன எனக் கூறும் நூல்
    (A) நன்னூல் (B) தொல்காப்பியம்
    (C) புறநானூறு (D) தண்டியலங்காரம்
17. 'நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்பாணன் சூடான் பாடினி அணியாள்' எனக் கூறும் நூல்
    (A) பரிபாடல் (B)சிறுபாணாற்றுப்படை
    (C) புறநானூறு (D) அகநானூறு

**விடைகள்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. A | 2. D | 3. D | 4. B | 5. C | 6. C | 7. C |
| 8. C | 9. C | 10. A | 11. A | 12. B | 13. C | 14. B |
| 15. B | 16. B | 17. C | | | | |

தினமும் தொடரும் – 7





256 பக்கம் ரூ. 300

TNPSC Group-IV & VAO
தேர்வு வழிகாட்டி புத்தகம் பெற
1800 425 7700 ( Toll Free ) 75500 09565 ( Whatsapp ) ( காலை 7:00 - இரவு 7:00 மணி )